நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்
- 3 NOV 2009

3

## கருக்கம்

நிலம் – நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலங்களை அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கு அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையிலேயே வழங்க வேண்டும் என நடைமுறையிலிருக்கும் அரசாணைகளுக்கு விலக்களித்து, மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாநகராட்சி ஆணையர்கள் தங்கள் மாநகராட்சிகளுக்கு சொந்தமான நிலங்களை மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநகரங்களுக்கு சொந்தமாக புதிய அலுவலகங்கள் கட்ட தானமாக வழங்கவும், அவர்களிடமிருந்து அந்நிலங்களை சம்பந்தப்பட்ட மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் தானமாக பெறவும் அனுமதித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசு ஆணை (நிலை) எண். 208 நாள்: 02.11.2009

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம்
ந.க. எண்.47336/2006/எம்.சி.எ.3 நாள் 07.10.09.

---

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், தமிழகத்தில் ஏழு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்கள் உள்ளன என்றும், அவ்வியக்குநரகங்களில் பணிபுரியும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் அந்தஸ்தில் பணியாற்றுகின்றனர் என்றும், அவர்கள் மூன்றிலிருந்து ஐந்து மாவட்டங்கள் வரை அமைந்துள்ள அனைத்துநிலை நகராட்சிகளின் செயல்பாடுகளை கண்காணித்து வருகின்றனர் என்றும், அவர்களுக்கு மண்டல செயற்பொறியாளர்கள், உதவி திட்ட அலுவலர்கள், கம்யூட்டர் புரோகிராமர்கள் மற்றும் இதர அலுவலர்கள் உறுதுணையாக உள்ளனர் என்றும், அந்த ஏழு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகங்கள் செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, திருப்பூர், சேலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் செயல்பட்டுவருகின்றன என்றும், இவற்றில், சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் தனது சொந்த கட்டிடத்தில் இயங்கினாலும் அக்கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என்றும், இதர மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்களில் வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் தவிர, அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்களும் போதிய இடவசதி இல்லாத வாடகை கட்டிடங்களில் இயங்கி வருவதாகவும், எனவே அதனை கருத்திற்கொண்டும், மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்களுக்குள்ள பொறுப்புகள் மற்றும் பணிச்சுமை ஆகியவற்றை கருத்திற் கொண்டும், வாடகை கட்டிடங்களில் இயங்கும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்களுக்கு சொந்தமாக புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2) மேலும், செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்களுக்கு சொந்தமாக புதிய அலுவலக கட்டிடம் கட்ட அந்தந்த இயக்குநரகங்கள் அமைந்துள்ள நகரங்களில் நிலங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| வரிசை எண் | மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் | புதிய அலுவலக கட்டிடம் கட்ட தெரிவு செய்யப்பட்டுள்ள நிலத்தின் விவரம் |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | ந.அ.எண்.409, பிளாக் எண் 5, வார்டு எண் -4-ல் அமைந்துள்ள செங்கல்பட்டு நகராட்சிக்குச் சொந்தமான 15 சென்ட் நிலம் |
| 2. | மதுரை | கோச்சடை கிராமம் ந.அ.எண். 17 & 18 ல் அமைந்துள்ள மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான 60 சென்ட் நிலம் |
| 3. | திருநெல்வேலி | பாளையங்கோட்டை கிராமம் பாகம் 3 சாந்திநகர், வேது மெயின்ரோடு, ந.அ. எண். 667/2A, (பாகம்)-ல் அமைந்துள்ள திருநெல்வேலி மாநகராட்சிக்கு சொந்தமான 41.32 சென்ட் நிலம். |
| 4. | சேலம் | இராஜேந்திரா சத்திரம், வார்டு ஏசி, பிளாக் எண்.26, ந.அ.எண்.76-ல் அமைந்துள்ள சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான 10,000 சதுரடி நிலம். |

மேலும் மதுரை, திருநெல்வேலி, சேலம் மாநகராட்சி மன்றங்கள் தங்களுக்கு சொந்தமான மேற்குறிப்பிட்ட இடங்களை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு தானமாக வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளன என்றும் செங்கல்பட்டு நகர மன்றத்திற்கு சொந்தமான நிலத்தை செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட தானமாக பெற செங்கல்பட்டு நகர்மன்றத்தின் இசைவு எதிர்பார்க்கப்படுவதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட திருப்பூர் நகரம் வார்டு-K, பிளாக்-9, ந.அ.எண்.5-ல் அமைந்துள்ள 31 சென்ட் நிலத்தை ஒதுக்கீடு செய்து ஏற்கெனவே அரசாணை (நிலை) எண்.204. ந.நி.(ம)கு.வ.துறை நாள் 16.09.09-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3) அரசாணை (நிலை) எண்.35 ந.நி.(ம)கு.வ.துறை நாள் 17.02.07-ல் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலத்தை அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கும்போது, அதனை, அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையிலேயே வழங்க வேண்டும் என உள்ளதால், அவ்வரசாணைக்கு விலக்களித்து மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான நிலங்களை செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி, சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்களுக்கு புதிய அலுவலகங்கள் கட்ட தானமாக வழங்க சம்பந்தப்பட்ட

உள்ளாட்சி அமைப்புகளின் ஆணையர்களுக்கு அனுமதியும், அவர்களிடமிருந்து அந்நிலங்களை தானமாக பெற சம்பந்தப்பட்ட மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களுக்கு அனுமதியும் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) மேலே பத்தி 3-ல் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. செங்கல்பட்டு நகர்மன்றத்திற்கு சொந்தமான 15 சென்ட் நிலத்தை அந்நகர்மன்றம் செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு புதிய அலுவலகம் கட்ட தானமாக வழங்குவது குறித்து இன்னும் இசைவளிக்காததால், செங்கல்பட்டு நகர்மன்றத்திற்கு சொந்தமான நிலத்தை செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு புதிய அலுவலகம் கட்ட தானமாக வழங்குவதை நிலுவையில் வைத்து, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலங்களை அரசு மற்றும் அரசு துறைச் சார்ந்த நிறுவனங்களுக்கு அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையிலேயே வழங்கவேண்டும் என அரசாணை (நிலை) எண்.35 ந.நி.(ம)கு.வ.துறை நாள் 17.02.97-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, நடைமுறையிலுள்ள அரசாணைக்கு விலக்களித்து, மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாநகராட்சிகளின் ஆணையர்கள் மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ள தங்கள் மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களை மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகங்களுக்கு சொந்தமாக புதிய அலுவலகங்கள் கட்ட, தானமாக வழங்கவும், அவர்களிடமிருந்து அந்நிலங்களை சம்பந்தப்பட்ட மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் தானமாக பெறவும் அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்,
மதுரை/ திருநெல்வேலி/ சேலம்.
மாநகராட்சி ஆணையர்கள்,
மதுரை/ திருநெல்வேலி/ சேலம்.
நகல்
மாண்புமிகு துணைமுதலமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ2) துறை, சென்னை-9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.
3/11/09